




# தினப்புயல்

PIN news THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 19

## இம்முறையும் தமிழ் மக்களை ஏமாற்றிய சர்வதேசம் - ஜனாதிபதியின் ஐ.நா உரை கூறுவது என்ன?



தலைவர் அவர்களே, செயலாளர் நாயகம் அவர்களே, அரச தலைவர்களே, கௌரவத்துக்குரிய உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம்..!

நடைபெறும் இந்த மாபெரும் மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்துகொள்ளக் கிடைத்தமையிட்டு, நான் பெருமையடைகிறேன். 76ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரின் அவைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மேதகு அப்துல்லா ஷாஹிட் (Abdulla Shahid) அவர்களுக்கு, என்னுடைய வாழ்த்துகளை முதற்கட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, நீங்கள் இலங்கையின் நீண்டகால நண்பராக இருக்கிறீர்கள். எதிர்வரும் காலங்களிலும், உங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிப் பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கிறோம். (03)



'வட மாகாண சபை இல்லாமல் போனது துரதிஸ்டம். தமிழ் மக்களது பிரச்சினைகளை சுட்டிக்காட்டக்கூடிய கட்டமைப்பாக மாகாண சபை இருந்தது. அது இல்லாமல் போயிருக்கின்ற பொழுது தமிழ் மக்களுடன் சார்ந்து எழுப்பக்கூடிய எங்களது குரல் இல்லாமல் போயிருக்கிறது.'

- வட மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல். (04)

## கிண்ணியாப் பிரதேசசபை ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற வேண்டும். - இம்ரான் எம்.பி



கிண்ணியா பிரதேச சபையில் இடம்பெற்றுள்ளதாக அந்தச் சபையின் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். (04)




அதிக வருமானம் பெறும் கால்பந்து வீரர்: மெஸ்சியை பின்னுக்குத் தள்ளினார் ரொனால்டோ

மெஸ்சி பார்சிலோனாவில் இருந்து பி.எஸ்.ஜி. அணிக்கும் ரொனால்டோ யுவான்டஸ் அணியில் இருந்து மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கும் சென்றபின் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. (04)

## கொரோனா தொடர்பான ஆலோசனைகளுக்கு 247 ஐ அழைக்கவும்

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு, மருத்துவ ஆலோசனை தேவைப்படுபவர்கள், எந்த நேரத்திலும் 247 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மருத்துவர் ஒருவரை தொடர்பு கொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மருத்துவரை தொடர்பு கொண்டதன் பின்னர், நோயாளியின் நோய் நிலைக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## ஜனாதிபதி கூறும் உள்ளக பொறிமுறை ஆபத்தானது

இலங்கை அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரை. டட்லி சேனநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை இலங்கையின் ஆட்சிபீடத்தில் இருந்த அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்கானத் தீர்வைப் பெற்றுத்தருவதில் இழுத்தடிப்பை மேற்கொண்டுவந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் இந்த அரசாங்கங்களை நம்பி எவ்வாறு ஒரு உள்ளக பொறிமுறைக்கு ஒத்துக் கொள்வது என்ற கேள்வியும் தற்பொழுது தமிழ் அரசியல் பரப்பில் எழுந்துள்ளது.

கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு முயல்கிறது. இதற்கான உத்தரவாதத்தை ஐக்கிய நாடுகள் செயலாளரிடம் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச வழங்கியுள்ளார். இலங்கையை இனப்படுகொலையில் இருந்து காப்பாற்றுவதற்கு அமெரிக்கா தனது செயற்பாடுகளை முடுக்கியுள்ளது. அதே நேரம் சீனா இலங்கையில் கால் ஊன்றி இருப்பதை விரும்பாத அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் இவற்றை அணுகுவதற்கே இலங்கை அதிபர் கோட்டபாய ராஜபக்சவுடன் கைகோர்த்துள்ளது.

இதுவரை காலமும் இலங்கையை ஆட்சிசெய்த அரசுகள் இனப் பிரச்சினைக்கானத் தீர்வு விடயத்தில் இழுத்தடிப்பு வேலையை நேரடியாகவும் மறைமுகமாகவும் தமது கைக்கூலிகளை வைத்து செயற்படுத்தி வந்தன. தமிழ் அரசியல்வாதிகள் ஒரு சிலரும் இவ்விடயத்தில் அரசுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது உண்மை.

யுத்தம் நிறைவடைந்து பத்தாண்டுகள் கடந்துவிட்டபோதிலும் அரசு கூறும் உள்ளகப் பொறிமுறையில் தமிழ் மக்களுக்கான சாதகமான விடயங்கள் எதுவும் நடைபெற வாய்ப்பு இல்லை. அரசின் உயர் பதவிகளை வகிக்கும் இராணுவத்தினர் போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் என ஐ.நாவிலே கூட குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் தந்திரோபாயங்களையே அரசு இதுவரை காலமும் செய்து வந்திருக்கிறது.

காணாமல் போனோரை விசாரிக்க அலுவலகம் என ஆரம்பித்து சாட்சி வழங்கப்போன தமிழ் மக்கள் இனந்தெரியாத நபர்களினாலும் அரச தரப்பினராலும் அச்சுறுத்தலுக்குள்ளாகினர். போர்க்குற்றங்களை செய்த தரப்பினரிடம் எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும். உள்ளக விசாரணை என்பது வெறும் கண்துடைப்பே. சர்வதேச விசாரணையே தமிழ் மக்களுக்கானத் தீர்வாக அமையும்.

## நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய ஆயுர்வேத சுவதரணி பொதி வழங்கிவைப்பு



மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்ட சுவதரணி பொதிகள் வழங்கி வைக்கும் நடவடிக்கை கடந்த பல மாதங்களாக அம்பாறை மாவட்டம் முழுவதும் நிந்தவூர் ஆயுர்வேத தொற்றாநோய் ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம்.நக்பர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில். நேற்றைய தினம் (22) நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள அரச மற்றும் அரச சார்பாற்ற நிறுவனங்களில் கடமையாற்று கின்ற வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய ஆயுர்வேத சுவதரணி பொதிகளை நிந்தவூர் ஆயுர்வேத தொற்றாநோய் ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம்.நக்பரி னால் வழங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக. அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான சுவதரணி பொதிகளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத்திடமும். அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான பொதிகளை ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலிடமும் வழங்கி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. **(மட்டு. துஷாரா)**



**நாட்டில் மேலும் 92 கொவிட் மரணங்கள் நேற்று (22.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,376 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1342 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 508,672 ஆக அதிகரித்துள்ளது.**

## சுத்தமான குடிநீர் வழங்கிய புரட்சி யுகம் மறைந்து வைத்தியசாலைக்கு நீர்த்தடை செய்யும் இருண்ட யுகம் நானு ஓயாவில் - பழனி விஜயகுமார் விசனம்

நானு ஓயா பிரதேச மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் வழங்கிய புரட்சி யுகம் மறைந்து சாதாரண மக்கள் பயன்படுத்தும் வைத்தியசாலைக்கு மனசாட்சியே இல்லாமல் நீர் விநியோகத் தடை செய்யும் இருண்ட யுகம் உருவாகி உள்ளதாக முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் அவர்களின் மக்கள் தொடர்பு அதிகாரி பழனி விஜயகுமார் தெரிவித்துள்ளார். நானுஓயா வைத்தியசாலைக்கு குடிநீர் விநியோகம் தடை செய்யப்பட்டுள்ள விடயம் குறித்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். "சேற்று நீர். ஊற்று நீர் என கிருமிகள் நிறைந்த சுத்தமற்ற நீரை பருகி பல நோய்களுக்கு உள்ளான பெருந்தோட்ட மக்களுக்கு சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் அவர்கள் தலைமையில் உலக வங்கியின் நிதி உதவியில் மலையக மக்கள் வாழும் பகுதிகளில் குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மலைநாட்டு புதிய கிராமங்கள். உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் ஊடாக டன்சினன். பொகலந்தலாவ. நானுஓயா போன்ற பகுதிகளில் பல கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் நானுஓயா கிளாசோ தோட்டத்தில் 135 மில்லியன் ரூபா பெறுமதியில் சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் அவர்களால் மக்கள் பாவனைக்கும் திறந்து வைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் ஊடாக நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று நன்மை அடைந்துள்ளன. மக்களுக்கு நன்மை பயக்கும் முன்னாள் அமைச்சர் திகாம்பரம் அவர்கள் தலைமையிலான நல்லாட்சி யுகம் மறைந்து இன்று மக்களுக்கு கிடைக்கும் சலுகைகளை சுயநல அரசியலுக்காக தடுத்து நிறுத்தும் இருண்ட ஆட்சி நடக்கிறது. நானுஓயா பிரதேச வைத்தியசாலை 37 மில்லியன் கடன் உதவியில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் திறப்பு விழாவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் நானுஓயா பிரதேச சபைத் தலைவர் வைத்தியசாலைக்கான குடிநீர் விநியோகத்தை தடை செய்துள்ளார். அதற்கு காரணமாக குடிநீர் கட்டணம் செலுத்தவில்லை என்றும் கூறியுள்ளார்.

வைத்தியசாலை என்பது இலவச பொது சுகாதார சேவை. தோட்டப்பகுதி மக்கள் இதன் மூலம் நன்மை பெற வேண்டிய நிலையில். புதிதாக திறக்கப்பட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற செல்லும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர். அதற்கு பிரதேச சபைத் தலைவரின் நீர்விநியோகத் தடையே காரணம். தனது சுயநல அரசியலுக்காக பிரதேச சபைத் தலைவர் இவ்வாறு நடந்து கொள்வது மிகவும் கவலை அளிக்கிறது.

இந்த வைத்தியசாலை திறப்பு விழா ஆளும் அரசாங்கத்தின் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்றுள்ளது. எனவே இவர்களும் அந்த கூட்டணியில் தான் உள்ளார்கள். ஆளும் கூட்டணியில் புறக்கணிப்பு என்பதற்காக சாதாரண தோட்ட மக்கள் பயன்படுத்தும் வைத்தியசாலைக்கான குடிநீரை தடை செய்வது நியாயமா? பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறாமல் பட்டியலில் தலைவர் பதவி பெற்ற வேலு யோகராஜா இதற்கு பதிலளிக்க வேண்டும். இவ்வாறான சிறுபிள்ளைதனமான அரசியலை கைவிட்டு மக்கள் நல அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக நானுஓயா வைத்தியசாலைக்கான குடிநீர் விநியோகத்தை வழங்கி அங்கு மக்கள் நலன் பெற தேவையான அனைத்து வசதிகளையும் நானுஓயா பிரதேச சபை ஊடாக செய்து கொடுக்க வேண்டுகிறேன்" என பழனி விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

**- நோட்டன் பிரிட்ஜ் நிருபர் இராமச்சந்திரன்**



# சிவில் சமூக இயங்குதளத்தின்...

(நேற்றைய இதழின் தொடர்ச்சி...)

**இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கு இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் வாண்மை மிகு அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இடையே உடன்பாடுகளைக் கட்டியெழுப்பும் தேவை உள்ளது.**

# இம்முறையும் தமிழ் மக்களை...

இதற்கு முன்னர் இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தொடரின் போது. மேதகு வொல்கன் பொஸ்கீர் (Volkan Bozkir) அவர்கள் ஏற்றிருந்த பொறுப்புகளுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதோடு. இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் சிறப்பாகத் தமது தலைமைத்துவத்தை வழங்கி வரும் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ் அவர்களையும் பாராட்ட. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். தலைவர் அவர்களே. கொவிட் - 19 தொற்றுப் பரவலானது. மானிட குலத்துக்கு. பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கிறது. தொற்றுப் பரவலால் தமக்கு நெருக்கமானவர்களை இழந்துள்ள அனைவருக்கும். எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகம் முழுவதிலுமுள்ள சுகாதார மற்றும் அத்தியாவசியச் சேவை ஊழியர்களின் அர்ப்பணிப்புகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு. இந்தப் பிரச்சினை தொடர்பில். உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கும் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொவிட் - 19 தொற்றுப் பரவலின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களைப் பறிமாறிக் கொள்ளவும் சிறந்த முறையில் நாடுகளை மீளக் கட்டியெழுப்பவும். பிராந்திய தகவல் மையமொன்றை அமைப்பதற்கான ஒத்துழைப்பு. உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு வழங்க. இலங்கை எதிர்பார்க்கின்றது. வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றல் மற்றும் சிகிச்சை முறைமைகளை அறிமுகப்படுத்துவதில். அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேகமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளை. நான் மிகவும் பாராட்டுகிறேன். அதேவேளை. ஆபத்துமிக்க புதிய வைரஸ் திரிபுகள் பரவலடைவதைத் தடுப்பதற்கான தடுப்பூசி உற்பத்தி. விநியோகம் மற்றும் அவற்றை ஏற்றுக்கொள்ளல் போன்றன தொடர்பில் காணப்படும் சவால்களை உடன் வெற்றிகொள்வது எவ்வாறு என்பது தொடர்பில் அடையாளம் காணப்படல் வேண்டும். அனைத்து இடங்களிலுமுள்ள அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்வது. தொற்றுப் பரவலில் இருந்து மீள்வதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருப்பினும். தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தில். இலங்கை வெற்றி கண்டுள்ளது.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும். முழுமையானளவில் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். ஒக்டோபர் மாத இறுதிக்குள். 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும். முழுமையானளவில் தடுப்பூசி ஏற்றப்படும். மிக விரைவில். 15 வயதுக்கு மேற்படி சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம். சுகாதாரச் சேவை ஊழியர்கள். பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார். அரச ஊழியர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பே. இந்தத் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்துக்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது. தொற்றுப் பரவல் முகாமைத்துவத்துக்காக. இரு தரப்பு மற்றும் பல தரப்பு நன்கொடையாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி மற்றும் பொருள் உதவிகளால். இலங்கை பெரிதும் நன்மையடைந்தது. அந்த நன்கொடையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு. இவ்விடத்தில் நான் நன்றிகூறக் கடமைபட்டிருக்கிறேன். தற்போது நிலவும் சிக்கலான காலப்பகுதியில். உலகளவில் காணப்படும் பெரும் ஒத்துழைப்பு மிகவும் ஊக்கமளிக்கிறது. எவ்வாறாயினும். செய்யவேண்டிய மேலும் பல விடயங்கள் இருக்கின்றன.

தலைவர் அவர்களே. தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையானது. விசேடமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு. மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. இது. 2030இல் அடைய எதிர்பார்த்திருக்கும் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்துவதற்குப் பாதகமாக அமைந்திருக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள். இவ்வாறான நிலையற்ற தன்மையிலிருந்து மீள்வதற்காக. சர்வதேசப் பொறிமுறையொன்றின் ஊடாக அபிவிருத்திக்கான நிதி மற்றும் கடன் சலுகை உள்ளிட்ட மேலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அத்தியாவசியமாகியுள்ளது. தொற்றுப் பரவல் காரணமாக. இலங்கை கடுமையான சிரமத்துக்கு உள்ளாகியுள்ளது. சோகமயமான உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக. எங்களுடைய பொருளாதாரத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாட்டைப் பூட்டுவது மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடு விதித்தல். சர்வதேச உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சி மற்றும் மிதமான உலக வளர்ச்சி என்பன. எமது பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கையானது. அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டும் வழிமுறையாகக் காணப்படுவதும் நாட்டின் சனத்தொகையில் 14 சதவீதமானோர் தங்கியிருக்கும் தொழிற்றுறையுமான சுற்றுலாத்துறை. பெரிதளவில் சரிவடைந்துள்ளது.

சுற்றுலாத் தொழிற்றுறை மற்றும் ஏனைய பல துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர அளவில் ஈடுபட்டிருக்கும் வர்த்தகங்களுக்கு. வட்டி நிவாரணம் மற்றும் நிதி பெற்றுக்கொடுத்தல் போன்று. அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள் மூலம் சலுகைகள் வழங்கப்பட்டன. நாளாந்தம் வருமானம் பெருவோர் மற்றும் குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு. நிதி உதவிகளும் உலருணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன. நாடு மூடப்பட்ட காலப்பகுதிகளில் இவ்வாறான உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால். அரச செலவானது அதிகரித்தது. தொற்றுப் பரவலால் ஏற்பட்ட நேரடிப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக ஏற்பட்ட இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளானவை. எங்களுடைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இருந்த நிதியின் இருப்பைச் சீர்க்குலைய வைத்தன. தலைவர் அவர்களே. தொற்றுப்பரவலின் விளைவுகள். மனித குலத்துக்கு மிகவும் அழிவுகரமானவையாக அமைந்தன. இவற்றை விட மிக மோசமான விளைவுகளை. காலநிலைப் பிரச்சினைகள் ஏற்படுத்தக்கூடும். அதனால். எதிர்வரும் சில தசாப்தங்களுக்குள் இந்த உலகம். பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். இந்தப் பூமியின் ஆரோக்கியத்துக்கு. முன்னர் இல்லாதளவில் மேற்கொள்ளப்படும் மனிதச் செயற்பாடுகள் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன என்று. காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்கள் மற்றும் பல்லுயிர்ப் பரம்பல் இல்லாமல் போவதால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்குத் தீர்வு காண்பதற்காக. தீர்க்கமானதும் உடனடியானதுமான பலதரப்பு நடவடிக்கையொன்றின் தேவை அவசியமாகியுள்ளது. காலநிலை மாற்றங்களுக்கு இலக்காகும் ஒரு நாடாக. அதில் உள்ள அபாயங்கள் குறித்து இலங்கை நன்கு அறிந்திருக்கிறது. இலங்கையின் தத்துவப் பாரம்பரியம் ஆழமாக வேரூன்றியுள்ள என்றும் சுற்றுச்சூழல் மதிப்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும். கௌதம புத்தர் வலியுறுத்தியிருக்கிறார். இலங்கையானது. பொதுநலவாய அமைப்பின் நீல சாசனத்தின் பலமிக்க நாடாக விளங்குவதோடு. இதன் அடிப்படையிலேயே. சதுப்புநிலக் கலாசாரம் தொடர்பான செயற்பாட்டுக் குழுவுக்குத் தலைமைத்துவத்தையும் வழங்கி வருகின்றது. 2030ஆம் ஆண்டுக்குள். நைட்ரஜன் கழிவுகளின் அளவை அரைவாசியாகக் குறைக்க எதிர்பார்த்திருப்பதோடு. 'நிலையான நைட்ரஜன் முகாமைத்துவம் பற்றிய கொழும்பு சாசனத்தை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம். சுற்றுச்சூழல் மாசடைவைக் கட்டுப்படுத்தி. உலகளாவிய முயற்சிகளுக்கு. இலங்கையும் பங்களிப்பு நல்கியுள்ளது. ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற முன்கூட்டிய மாநாட்டில். ஒன்லைன் ஊடாகக் கலந்துகொண்டதன் மூலம். இந்த மாதத்தின் பிற்பகுதியில் இடம்பெறும் ஐ.நா உணவு மாநாடானது. உலகளவில் ஆரோக்கியமானதும் நிலையானதும் மற்றும் சமமான உணவு முறைகளை ஊக்குவித்தல் தொடர்பில் செயற்பாட்டு ரீதியிலான பிரதிபலன்களைப் பெற்றுத்தரும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவ்வாறான பிரதிபலன்கள். மனிதச் சுகாதாரத்தைப் போன்றே. இந்தப் பூமியின் சுகாதாரத்துக்கும் மிக முக்கியமாக அமையும்.

நிலைத்தன்மை என்பது. இலங்கையின் தேசிய கொள்கைக் கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகும். மண் வளம். பல்லுயிர். நீர்வழிகள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பில் எழுந்த பிரச்சினைகள் காரணமாக. என்னுடைய தலைமையிலான அரசாங்கம். இந்த ஆண்டின் ஆரம்பத்தில். இரசாயனப் பசளை. பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் பயன்பாட்டுக்குத் தடை விதித்தது. சேதனப் பசளை உற்பத்தி மற்றும் அதனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாயத்துக்கான முதலீடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இலங்கைக்குள் நிலையான விவசாயத்தை உருவாக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்காக. உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் பலவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஊக்கமளிப்புகளுக்கு. இவ்விடத்தில் நன்றி கூறிக்கொள்கிறேன். நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நமது தேசிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். அடுத்த சில தசாப்தங்களில். வனப்பகுதியை கணிசமானளவில் அதிகரிப்பதே எங்கள் குறிக்கோளாக இருக்கின்றது. நாடு முழுவதிலும் காணப்படும் 100 ஆறுகளுக்கும் மேலானவற்றைச் சுத்தம் செய்து மீட்கவும் ஆறுகள் மற்றும் சமுத்திர மாசுபடுத்தலுக்கு எதிராக நிற்கவும். நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஆதரவாக. ஒருமுறை உபயோகிக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கும் தடை விதித்துள்ளோம். படிம எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்து கார்பனேற்றத்தை ஆதரிப்பதற்கான அவசரத் தேவையை இலங்கை அடையாளம் கண்டுள்ளது. எம்முடைய மின்சக்தி கொள்கையின் ஊடாக. 2030ஆம் ஆண்டுக்குள். எமது தேசிய மின்சாரத் தேவையின் 70 சதவீதத்தை. சூரியசக்தி. காற்றாலை மற்றும் நீர் போன்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களினூடாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம். தலைவர் அவர்களே. எமது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும் போதும். சர்வதேச சமூகத்தினரின் ஒத்துழைப்பை இலங்கை அன்புடன் வரவேற்கிறது. முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வர்த்தகத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும். எமது நாட்டின் அமைவிடம் மற்றும் எங்களுடைய வலுவான நிறுவனங்கள். வலுவான சமூக உட்கட்டமைப்பு மற்றும் திறமையான பணியாளர்களை அதிகளவில் பயன்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம்.

இதற்கான வசதிகளை வழங்குவதோடு. எமது மக்கள் அனைவரையும் வளப்படுத்துவதற்கான நீதி. ஒழுங்கு. நிர்வாகம் மற்றும் கல்வி போன்ற துறைகளையும் விரிவுபடுத்தி. விரிவான சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள. எனது அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் இருந்தே. இலங்கையானது சர்வஜன வாக்குரிமையைப் பெற்றிருந்தது. ஜனநாயகக் கலாசாரம் என்பது. எமது வாழ்வியலில் மிக முக்கிய அங்கமாகக் காணப்படுகிறது. வளமானதும் நிலையானதுமான நாடொன்று உருவாக்கப்படுவதற்காகவும் தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்காகவும். 2019ஆம் ஆண்டில் என்னை இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கவும் 2020இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின் ஊடாகப் புதிய அரசாங்கமொன்றை உருவாக்கவும். மாபெரும் மக்கள் ஆணையை இலங்கை மக்கள் வழங்கியுள்ளனர். 2019ஆம் ஆண்டில். அடிப்படைவாத மதவாதத் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களையும் இலங்கை எதிர்கொண்டது. அதற்கு முன்னர். அதாவது 2009ஆம் ஆண்டு வரையில். சுமார் 30 வருடங்களாக இலங்கையில் யுத்தம் நிலவியது.

பயங்கரவாதம் என்பது. உலகளாவிய அச்சுறுத்தல் என்பதோடு. அதனை வெற்றிகொள்ள வேண்டுமாயின். விசேடமாகப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு. சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகின்றது. கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில். இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிர்களும் பல தசாப்தங்களுக்குரிய செழிப்பும் இழக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வன்முறைச் செயல்கள் இலங்கையில் மீண்டும் நடக்காது என்பதை உறுதி செய்வதில் எனது அரசு உறுதியாக உள்ளது. அதனால். அவற்றின் பின்னால் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள. தேசிய நிறுவனங்களினூடான பொறுப்புக்கூறல். மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. பொருளாதார அபிவிருத்தியின் பிரதிபலன்களுக்காக. நியாயமான பங்கேற்பை உறுதி செய்வதிலும் உண்மையாக இருக்க வேண்டும்.

இனப் பாகுபாடு. மதம் மற்றும் பாலின வேறுபாடுகளின்றி. அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதும் நிலையானதும் பாதுகாப்பானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதே. என்னுடைய அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்தச் செயற்பாட்டுக்காக. அனைத்து உள்ளூர் பங்குதாரர்களுடன் இணைந்து. சர்வதேசப் பங்குதாரர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயார். எவ்வாறெனினும். மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் உள்ளூர் நிறுவனங்கள் மூலம் மட்டுமே நிலையான முடிவுகளைப் பெறமுடியுமென்பதை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. இலங்கையின் பாராளுமன்றம். நீதித்துறை மற்றும் சுயாதீன சட்டரீதியான அமைப்புகள். தாங்கள் செயற்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வரம்பற்ற இடத்தைக் கொண்டிருக்கவேண்டும். மதிப்புக்குரிய தலைவர் அவர்களே. உறுப்பினர்களே. இன்று நமது பொதுச் சபை விவாதத்தின் கருப்பொருளுக்கு ஏற்ப எங்கள் நம்பிக்கையின் மூலம் உண்மையான நெகிழ்ச்சியை உருவாக்க வேண்டுமாயின். நாங்கள் அனைவரும். பொது நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். இறையாண்மையுடன் கூடிய அனைத்து அரசாங்கங்களினது அளவையும் வலிமையையும் பொருட்படுத்தாமல். நியாயமான முறையில் கருதி. அவர்களின் வழிமுறைகள் மற்றும் பாரம்பரியத்துக்கு உரிய மரியாதையுடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது. ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பாக இருக்கின்றது. ஆப்கானிஸ்தானில் பௌத்த உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிக்குமாறு. ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேசத்திடமும் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து மனித குலத்துக்கும் சிறந்ததும் நிலையானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக. உண்மையான ஒத்துழைப்புடனும் தியாக மனப்பான்மையுடனும். நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர மரியாதையுடன் ஒன்றாகப் பணியாற்றுவோம் என்று. இந்த மாபெரும் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி..!

## சி.வி.கே.சிவஞானம் அவர்களுடனான நேர்காணல்...

**கேள்வி :–** இன்று நாட்டில் பரவியுள்ள கொவிட் நிலைமையையும், மக்களது பொருளாதாரச் சிக்கல்களையும், தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளையும் நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:** முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை இல்லாமல் போனது துரதிஸ்டவசம் என்று தான் நினைக்கின்றேன். நாங்கள் பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை என்றாலும் கூட ஒரு அமைப்பாக இருந்து தமிழ் மக்களுக்கு ஆங்காங்கு இடம்பெறும் அநீதிகளை. குறைபாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டக்கூடிய கட்டமைப்பாக இருந்தது. அது இல்லாமல் போயிருக்கின்றபொழுது தமிழ் மக்களுடன் சார்ந்து எழுப்பக்கூடிய எங்களது குரல் இல்லாமல் போயிருக்கிறது. இரண்டாவது இன்றைய நிலையில் கொரோனா பெருந்தொற்று என்பது உலகளாவிய ஒரு பாதிப்பு தான். ஆனால் இந்த நாட்டை பொறுத்தவரையில் மக்கள் பாரிய பொருளாதார வாழ்வியல் இக்கட்டை நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள். தற்பொழுது தொடர்ச்சியாக கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக ஊரடங்கு என்று சொல்லக்கூடிய லொக்டவுனில் இருக்கின்றோம். எனவே பொதுவாக அன்றாட தொழில்களை மேற்கொள்பவர்களின் வாழ்வாதாரத்திற்காக அல்லலப்படும் நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இன்று இலங்கை முழுவதுமே பாரிய இன்னலை இந்த மக்கள் எதிர்கொள்கின்றார்கள்.

ஆகவே இன்றைய அரசாங்கமும் போதியளவு உதவிகளை செய்யவில்லை என்பது உண்மையாக இருந்தாலும் அரசாங்கமும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் இறக்குமதிகளை தடை செய்யலாம் அது பிரச்சினையில்லை. ஆடம்பர பொருட்களின் இறக்குமதியை தடை செய்து வரியை கூட்டுவதில் பிரச்சினையில்லை. ஆனால் சில சமயங்களிலே அத்தியாவசிய பொருட்களுக்கும் தடைகளை விதித்திருக்கின்றது அதுபிழை. உதாரணமாக மஞ்சள் போன்றவை அத்தியாவசிய பொருள். அதை தடை செய்தால் அதற்கான போதியளவு உற்பத்தி இருப்பதாகவும் எனக்கு தெரியவில்லை. விவசாயத்திற்காக மானியத்திலே வழங்கப்பட்ட பசளைகளின் இறக்குமதி தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே உற்பத்திகள் கட்டாயம் குறையப்போகின்றது. சேதன உற்பத்தி எல்லா வகையிலும் சார்ந்தது தான். மக்களினுடைய வாழ்வு உடலியல் சுகாதாரம் அனைத்திற்கும் சேதன உற்பத்தி திறம் தான். ஆனால் திடீரென உர இறக்குமதியை தடை செய்தால் அதனுடைய தாக்கம் என்னவென்றால் விவசாய உற்பத்தி குறையப்போகின்றது. அதனுடைய தேவைகள் அதிகரிக்கின்றபொழுது இறுதியாக உற்பத்தியை இறக்குமதி செய்யவேண்டிய ஒரு நெருக்கடிக்குள் கூட இந்த அரசாங்கம் உள்ளாகலாம். (தொடரும்...)

## அதிக வருமானம் பெறும்...

மெஸ்சிக்கு பார்சிலோனா மிக அதிக அளவில் சம்பளம் கொடுத்து வந்தது. கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு ரியல் மாட்ரிட் அதிக சம்பளம் கொடுத்தாலும் மெஸ்சியைவிட குறைவாகத்தான் வாங்கினார். மேலும், வணிக ஒப்பந்தம் உட்பட இதர வருமானத்திலும் மெஸ்சி முன்னிலை பெற்றிருந்தார்.

ரொனால்டோ யுவென்டஸ் அணிக்கு சென்ற பிறகு, அவரது சம்பளம் வெகுவாக குறைந்தது. தற்போது மெஸ்சி பார்சிலோனாவில் இருந்து விலகி பி.எஸ்.ஜி. அணிக்கு சென்றுள்ளார். இதனால் மெஸ்சி சம்பளம் குறைந்துள்ளது. இந்த நிலையில் 2021–22 சீசனில் மெஸ்சியை விட ரொனா ல்டோ அதிக வருமானம் ஈட்டும் நபராக இருப்பார் என போர்ப்ஸ் பத்தி ரிகை தகவல் வெளியிட்டுள்ளது. ரொனால்டோ வரியுடன் 125 மில்லின் டொலர் சம்பளம் பெறும் நிலையில், மெஸ்சி 110 மில்லியன் டொலரே பெறுவார் எனத் தெரிவித்துள்ளது. மான்செஸ்டர் யுனைடெட் அணி ரொனால்டோவுக்கு போனஸ் உடன் சேர்த்து 70 மில்லியன் டொலர் சம்பளம் கொடுக்கிறது. வணிக ஒப்பந்தம் மூலம் 55 மில்லியன் வருமானம் ஈட்டுகிறார். மெஸ்சி சம்பளம் மற்றும் போனஸ் மூலம 75 மில்லியன் டொலர் ஈட்டுவார் எனத் தெரிவித்துள்ளது.

– அப்துல் ஜெப்பார் அப்துல்லா

## கிண்ணியா பிரதேச சபை...

உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீதி கிரவலிடப்பட்டு புனரமைக்கப்பட்டதாக பொய்யாகக் கூறி கிண்ணியா பிரதேச சபையினால் நிதி செலவிடப்பட்டுள்ளதாக அந்தச் சபையின் உறுப்பினர்கள் சிலரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த வீதி கிரவலிட்டு செப்பனிடப்படவில்லை. சில மணித்தியாலயங்கள் மோட்டர் கிரைண்டர் வேலை மட்டுமே செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் அரச உத்தியோகத்தர்களும் பொதுநல அமைப்புகளும் தெரிவித்துள்ளனர்.

அதேபோல நீர்வழிந்தோடும் குழாய்கள் பொருத்தப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக நிதி பெறப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சபை உறுப்பினர்களுக்கு சில மாத காலம் வரவு செலவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் இவை போல வேறு சில குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ அவரின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தில் ஊழலற்ற நிர்வாகம் பற்றிச் சொல்லியுள்ளார். ஆனால் அவரின் ஆட்சியில் எங்கும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களே தற்போது வெளிவருகின்றன. இவை தொடர்பில் நீதியான விசாரணை செய்யப்பட வேண்டும். தவறு இடம் பெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சில விடயங்களை பூசி மெழுகி சமாளித்து விடுவார்கள் என்று பொதுமக்கள் கருத்துத் தெரிவிப்பதால் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நீதியான விசாரணை செய்து அதனை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் இவ்வாறு தெரிவித்தார்.

– பைஷல் இஸ்மாயில் –

## 63 பென்குயின்களின் உயிரைப் பறித்த தேனீக்கள்



அரிய வகையிலான 63 பென்குயின்களை விஷத் தேனீக்கள் கொட்டிக் கொன்றுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.தென் ஆப்பிரிக்கா நாட்டின் கெப் டவுன் என்னும் நகரில் ஆச்சரியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. இந்நகரின் கடலோர பகுதியில் பறவைகள் காப்பகம் ஒன்று உள்ளது. இந்த காப்பகத்தில் அரிய வகையிலான பென்குயின்கள் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இந்த நிலையில் அந்த காப்பகத்தில் பாது காக்கப்பட்டு வந்த பென்குயின்களை விஷத் தேனீக்கள் கொட்டியுள்ளன.

இதனால் 63 பென்குயின்கள் இறந்துள்ளன. இது குறி த்து கால்நடை மருத்துவரான டேவிட் ரொபர்ட்ஸ் கூறியதாவது, "பென்குயின்களின் கண்களை சுற்றிலும் தேனீக்கள் கொட் டிய அடையாளம் உள்ளது. அதோடு பென்குயின்கள் உயிரிழந்த இடத்தில் பல விஷத் தேனீக்களும் இறந்து கிடந்துள்ளது. மேலும் பென்குயின்களை பிரேதப் பரிசோதனை செய்தபோது அதன் உடல் முழுவதும் விஷத் தேனீக்கள் கொட்டியது தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் மிக அரிதானதாகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதுமாக உள்ளது.

## 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது டெல்லி கெப்பிடல்ஸ்

ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் தொடரின் 33வது லீக் ஆட்டம் துபாயில் நடைபெற்றது. இதில் டெல்லி கெப்பிடல்ஸ் - சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டொஸ் வென்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி கெப்டன் கேன் வில்லியம்சன் பெட்டிங் தேர்வு செய்தார். அதன்படி அந்த அணியின் டேவிட் வோர்னர். விருத்திமான் சகா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். முதல் ஓவரை அன்ரிச் நோர்ஜே வீசினார். முதல் ஓவரிலேயே வோர்னர் ரன் ஏதும் எடுக்காமல் டக்-அவுட் ஆனார். அதன்பின் வந்த கேன் வில்லியம்சன் 18 ரன்னிலும். சகா 18 ரன்னிலும். மணிஷ் பாண்டே 17 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 74 ரன்னுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து சன்ரைசர்ஸ் ஐதராபாத் தத்தளித்தது.

அதன்பின் வந்த அப்துல் சமாத் 21 பந்தில் 28 ரன்களும். ரஷித் கான் 19 பந்தில் 21 ரன்களும் சேர்க்க சன்ரைசர்ஸ் ஐதராபாத் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 134 ரன்கள் எடுத்துள்ளது. டெல்லி கேப்பிடல்ஸ் அணி சார்பில் நோர்ஜே 2 விக்கெட்டும். ரபடா 3 விக்கெட்டும். அக்சார் பட்டேல் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 135 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி கெப்பிடல்ஸ் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர் பிரத்வி ஷா 11 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து மற்றொரு தொடக்க வீரர் ஷிகர் தவான் உடன் ஷ்ரேயாஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 17.5 ஓவரில் டெல்லி அணி 139 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.